ஏற்கனவே ரூ. 1.35 என்றிருந்த பேட்டாவை இரண்டு ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. 1969-ம் ஆண்டில் இதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இது போன்ற பிரச்னைகள் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன.

State Transport Bus accident near Oorapakkam.

* 50 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there was any accident involving a State Transport Bus near Oorappakkam in Chingleput District about 3rd June 1970 resulting in the loss of life?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 2-6-70-ல் செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கத்திற்கு அருகில் வழித்தடம் 81பி-ல் ஓடும் அரசுப் போக்குவரத்து பேருந்தும் ஒரு லாரியும் விபத்துக்குள்ளாயின. விபத்தில் 4 பிரயாணிகள் உயிரிழந்தனர்.

திரு. டி. மார்டின் : தற்சமயம் அரசு போக்குவரத்து விபத்துக்குள்ளாகி சென்னையில்கூட சென்டிரல் ஸ்டேஷன் முன்பு மூன்று பேரும் இறந்து, 5 பேர் பெரிய காயங்கள் அடைந்தும், இன்னும் பல பேர் காயங்கள் அடைந்து மருத்துவ மனையில் இருப்பதாகவும் சமீபத்தில் செய்தி வெளியாகி இருக்கிறது. டிரைவர்களை விசாரிக்கும்போது வண்டியில் பிரேக் சரியில்லை என்றும், வண்டி சரியான முறையில் பழுது பார்க்கப்படவில்லை யென்றும், அதன் காரணமாக இப்படிப்பட்ட விபத்துக்கள் நடக்கின்றன என்றும் கூறுகிறார்கள். எல்லா வண்டிகளையும் மற்ற தனியார் பேருந்துகளைப் பரிசோதிக்கிற மாதிரி, எல்லா 'மெகானிசமும்' சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். எல்லா வண்டிகளையும் நல்ல முறையில் 'roadworthiness' என்று சொல்வார்களே, அந்த அளவுக்குக் கொண்டு வருவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் நீண்ட கேள்வியைக் கேட்டார்கள். நம்முடைய அரசாங்க பஸ்ஸிலே மாத்திரம்தான் இது போன்ற விபத்துக்கள் வருகின்றன என்பதல்ல. தனியார் பஸ்ஸிலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அரசாங்க பஸ் என்ற உடனே இதைப்பற்றி மிகைப்படுத்திப் பேசுகிறார்கள். நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி இந்த விபத்து பற்றிய விளக்கத்தை சொல்ல விரும்புகிறேன்.

A private lorry belonging to Sri Sadananda Lorry Service came in the opposite direction and it is stated to have skidded and dashed against the State Transport Bus which was standing at that time.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, இந்த ஆக்ஸிடெண்ட் ஆவதற்குக் காரணம் டிரைவர்கள் சரியான 'எக்ஸ்பெர்ட்' —சரியான பழக்கம்—இல்லாதவர்கள் என்று கொள்ள வேண்டும். இப்போது டிரான்ஸ்போர்ட்டில் ஏற்படக்கூடிய ஆக்ஸிடென்ட்

1970 ஆகஸ்ட் 26]

எல்லாம் பஸ்களுடைய கண்காணிப்பு சரியாக இல்லை என்பது தான் பொருள். டிரைவர்களாக அவர்கள் வருவதற்கு டெஸ்ட்கள் வைத்து அவர்கள் வேலைக்கு எடுக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டிரைவர்கள் தகுதி, பயிற்சி எல்லாவற்றின் அடிப்படையில்தான் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

ஜேடர்பாளையத்தருகில் வாய்க்கால் வெட்டுதல்.

* 51 **வினா.—திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜேடர்பாளையத்தருகில் வாய்க்கால் வெட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், ஜெயங்கொண்டம், அரியலூர் வட்டங்களுக்கு பாசன வசதிச் செய்துக் கொடுக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம் பரிசீலிக்கப் பட்டு அதிக செலவு ஆவதாலும் பயன் மிகவும் குறைவாக இருப்ப தாலும் இத்திட்டம் கைவிடப்பட்டது.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, இந்த ஜேடர்பாளையத் தருகில் வாய்க்கால் வெட்டினால் பெரம்பலூர், ஜயம்கொண்டம், அரியலூர் பகுதிகளுக்குப் பயன்படும். ஆகையால் அந்தப் பகுதி யில் அரசாங்கச் செலவில் சமுதாயக் கிணறுகள் வெட்டி பாசனம் செய்து தருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தக் கேள்வியை விவசாயத்துறை அமைச்சரைக் கேட்கவும்.

பொறியாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் வீட்டு வசதி.

* 52 **வினா—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித்துறையிலே பணியாற்றும் பொறியாளர் களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும், வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர். பொ. பொன்னம்பலம் : பேரவைத் தலைவரவர்களே, வட்ட அளவில் பணியாற்றும் பொறியாளர்களுக்கும், மேற்பார்வை யாளர்களுக்கும், கிராமப்புறங்களில் வீட்டு வசதி கிடைக்காத